# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 120/மாநகராட்சி/2018**

**நாள் : 09/08/2018**

**திரு S. ஆனந்தன்,**
**சென்னை – 600 092.** – **முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 10,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**
**சென்னை – 24.** – **எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, விருகம்பாக்கம், எண்.44–B, ஆற்காடு சாலை, எண். A-9, ரெட்டம்மா அடுக்கக மனையில் வசிக்கும் திரு S. ஆனந்தன் அவர்களின் 29.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 120/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுதாரரிடம் 16.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, விருகம்பாக்கம், எண்.44–B, ஆற்காடு சாலை, எண். A-9, ரெட்டம்மா அடுக்கக மனையில் வசிக்கும் திரு S. ஆனந்தன் என்பவர் தான் குடியிருக்கும் அடுக்கக மனையில் வழிப்பாதையின் மேல்பகுதி (11x135 அடி) நிலம் முன்னாள் நில உரிமையாளரால் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட தரைத் தளக் கூரை மற்றும் முதல் தளத்தில் அமைந்துள்ள கட்டடம் இடிந்து விழுந்து கொண்டிருப்பதால், அதனை அகற்ற ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட முறையீடு சம்பந்தமாக மனுதாரர் 16.07.2018 அன்று நடைபெற்ற விசாரணைக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தன்னுடைய முறையீட்டு மனுவின் நகல் கே.கே.நகர் காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், மாநகராட்சி மண்டல அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை

என்றும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு முறையீடு செய்த பின்பே ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டடம் இடிக்கப்பட்டது என விசாரணையின் போது மனுதாரர் தெரிவித்தார். ஆக்கிரமிப்புக் கட்டடத்தினை அகற்றுவதற்கான செலவினை சம்பந்தப்பட்ட குடியிருப்புச் சங்கமே ஏற்றுக் கொண்டது எனவும் விசாரணையின் போது குறிப்பிட்டார்.

3. இந்நேர்வில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததில், ஆக்கிரமிப்பு கட்டடத்தினை அகற்றுவது சம்பந்தமான கோரிக்கை 2015–ஆம் ஆண்டிலிருந்தே நிலுவையில் இருந்து வந்துள்ளது. சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் 10–வது மண்டல செயற்பொறியாளர் ஆகியோருக்கு இவ்வாக்கிரமிப்பு குறித்து தெரிவித்தும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும், தற்பொழுது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. எனினும், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் இதுபோன்ற நேர்வுகளில் மெத்தனம் காட்டாமல் மாநகராட்சி அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 – ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 9–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு S. ஆனந்தன்,
   A-9, ரெட்டம்மா அப்பார்மெண்ட்,
   44–B, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம்,
   சென்னை – 92.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 10,
   சென்னை மாநகராட்சி,
   எண்.64, என்.எஸ்.கே. சாலை,
   கோடம்பாக்கம், சென்னை – 24.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி